விலை: 50.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

www.edus.lk
eDUS
Learning made lovable
இலங்கையின் No.1 கல்வி நிறுவனத்துடன் இணைந்திடுங்கள்...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Everyone
0777 123 330
(11705)

சங்கு 23
ஒலி 169 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 23 திங்கட்கிழமை (06.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

மக்கள் கடும் அவதிப்படுகின்றனர்

# நாட்டின் நிலைமை மிகவும் மோசம்

## அரசு மீது எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் நாட்டின் நிலைமை மோசமடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசின் மீது குற்றம் சுமத்தியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



ரஷ்ய விமான விவகாரத்தில்

## அரசு தலையிட முடியாது

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

ரஷ்ய விமானம் தொடர்பான பிரச்சினை குறித்து ரஷ்ய தூதரகம் மற்றும் ரஷ்ய Aeroflot விமான நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ரஷ்ய Aeroflot எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கும் 15

## 21ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஆராய

தமிழ்க் கட்சிகள் இன்று கூடுகின்றன

(கொழும்பு)

21ஆவது திருத்தச்சட்ட மூலம் சம்பந்தமாக ஆராய்ந்து முடிவொன்றை எட்டுவதற்காக தமிழ்க் கட்சிகள் இன்று கூடவுள்ளன என. இந்தக் கூட்டம் மெய்நிகர் (Zoom) வழியில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக, முன்மொழியப்பட்ட 21ஆவது திருத்தச்சட்ட மூலம் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன மெய் நிகர் 15

## சவர்க்காரம், தீப்பெட்டி விலைகள் அதிகரிப்பு



(கொழும்பு)

வற் வரியின் அதிகரிப்பைத் 15

## ஓய்வுபெறும் வயதெல்லை 62ஆக மாற்றம்

05

லாஃப்ஸ் எரிவாயு

## 6,850 ரூபாயாக அதிகரிப்பு

(கொழும்பு)

12.5 கிலோ கிராம் உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 6,850 ரூபாயாக லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் அதிகரித்துள்ளது. 15

## ஜனாதிபதி பதவி விலகுவதால் நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்காது

நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகுவதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகியமை துரதிஷ்டவசமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். 15

## பால்மாவின் விலைகள்

மேலும் அதிகரிக்கும்?

(கொழும்பு)

பெறுமதி கூட்டல் வரி உட்பட சில வரிகள் கடந்த 31 ஆம் திகதி அதிகரிக்கப்பட்டுள்ளதால், கட்டாயம் பால்மாவின் விலைகளையும் அதிகரிக்க நேரிடும் 15

இனந்தெரியாத நபர்கள்

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் மீது நேற்று இரவு வெளியிலிருந்து வந்த இனந்தெரியாத நபர்கள் தாக்குதலை மேற் 15



பாடசாலைகள்

## இன்றுமுதல் மீள ஆரம்பம்

(கொழும்பு)

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் இன்று முதல் மீள ஆரம்பமாகவுள்ளதாக கல்வி 15

## அரச ஊழியர்களுக்கு வெள்ளி விடுமுறை

அமைச்சர் தினேஷ் யோசனை

(கொழும்பு)

வெள்ளிக்கிழமைகளில் அரச ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கான யோசனை எதிர்வரும் நாட்களில் முன்வைக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் 15

## போத்தல் குத்தியதில் நபர் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

நிலைகுலைந்து விழுந்த நபர் மீது இடுப்பில் செருகியிருந்த போத்தல் குத்தியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி ஏ9 வீதியில் பரந்தன் சந்தியை அண்மித்த பகுதியில் 15

## பொருளாதார நெருக்கடிக்கு சகல அரசுகளும் பொறுப்புக்கூற வேண்டும்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்ரஜித்

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சகல அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்ரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் செயற்பட்ட அரசாங்கங்களும் பொருளாதார 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச பஸ்கள் வழமை போன்று சேவையில் ஈடுபடும்

## அடுத்த சில நாட்களுக்குத் தேவையான எரிபொருட்கள் கையிருப்பில்



(கொழும்பு)

தூர சேவைகள் மற்றும் கிராம மட்டத்திலான பஸ் சேவைகள் இன்று முதல் வழமைபோன்று இடம் பெறும் என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கை போக்குவரத்து சபையிடமுள்ள எரிபொருள் கையிருப்பு, அடுத்த சில நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என சபையின் நடவடிக்கைப் பிரிவு அதிகாரி A.S.B. வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்று முதல் தனியார் பஸ் சேவைகள் 50 வீதத்தால் குறைக்கப்படும் என பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது நிலவும் டீசல் தட்டுப் பாட்டைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

# வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பைத் தயாரிக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

# கலந்துரையாடல் மூலமே நாட்டை முன்னேற்றலாம்

## நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

கலந்துரையாடல் மேற்கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்தி முன்னேறுவதே நாடு முன்னோக்கி செல்ல ஒரே வழி என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்படி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர், அனைவரையும் ஒன்றிணைத்து இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் பணியாற்றுவது அவசியம் என்றும் அவர் கூறினார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். பொருளாதார நெருக்கடி காரணமாக உயர் பதவியில் இருப்பவர்களை பதவி விலகுமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருவதாக சுட்டிக்காட்டிய முன்னாள் அமைச்சர், பதவி விலகல் மூலம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது எனவும் தெரிவித்தார். (ம-7)



உ
சிவமயம்

வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## ஆலய வருடாந்த பொங்கல் விழா

**10.06.2022 வெள்ளிக்கிழமை**

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்மவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

**அம்பிகை அடியார்களே!**

வன்னிவிளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் சுபகிருது வருஷம் வைகாசித் திங்கள் 27ம் நாள் (10.06.2022) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**குறிப்பு:-**

1. அடியார்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி (முகக்கவசம்) அணிந்து ஆலயத்திற்கு வருகைதர வேண்டும்.
2. பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
3. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
4. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 08.06.2022 காலை 10.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத்தருகின்றோம்.
5. உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப்பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
6. உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
7. மூடியுடன்கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத் தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை,
வன்னிவிளாங்குளம், மாங்குளம். சுபம் (C-4445)

# சேவைநலன் பாராட்டு

2016.09.01 தொடக்கம் 2022.06.03 வரை எமது கல்லூரியில் அதிபராக கடமையாற்றி யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு (1AB) அதிபராக இடமாற்றம் பெற்றுச்செல்லும்



## பரஞ்சோதி செல்வவிநாயகம்
SLPS-1

அவர்கள்

அமைதியின் கோயிலாய் கல்லூரி திகழ்ந்திட
அழகுடன் அவரது பணிதனை செய்தவர்
பக்குவமாய் பல கல்வியில் சாதனை
பாங்குடன் படைத்திட தான் வழி காட்டினார்.

புன்னகையோடெம்மை என்றுமே அணுகியே
புகழ்மொழிகூறியே மகிழ்வினை விதைத்தவர்
நன்நகையோடு என்றும் நலம் பல பெற்றுமே
சிறப்புடன் வாழ்ந்திட வாழ்த்துகின்றோமே.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ வரணி மத்திய கல்லூரி (C-4446)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 - 09 - 1981



இறப்பு 21 - 05 - 2018

## அமரர் கனகசபாபதி கௌரிதரன்

உன் உயிர் எங்களை விட்டுப் போனாலும்
உன் உயிர் எங்களுக்குத் தந்த நினைவுகள்
என்றும் போகாது ஆயிரம் உறவுகள் வந்துபோனாலும்
அண்ணா உனக்கு நிகராகாது ஒரு உறவும்

என்றும் உன் நினைவுகளுடன்
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (11741) தாய், தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அமரர்.திருமதி.வீரகத்தி கனகம்மா



நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமான திருமதி. வீரகத்தி கனகம்மா அவர்கள் 2022.05.31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை கண்மணி தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி கண்மணி தம்பதியரின் அருமை மருமகளும், கணேசலிங்கம் (ஜேர்மனி) சத்தியேஸ்வரி(ஜேர்மனி) காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கருணலிங்கம் (அதிபர்-கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை), குகனேஸ்வரி(நயினாதீவு), சண்முகலிங்கம் (சுவிஸ்), புஸ்பராணி (நெதர்லாந்து),கலைச்செல்வி (பிரான்ஸ்), கேதாரகௌரி (சுவிஸ்) ஆகியோரின் ஆருயிர் தாயாரும்

வசந்தி (ஜேர்மனி), ஆனந்தகுமாரன் (ஜேர்மனி), சோதிமலர், இராஜேஸ்வரன், சறோஜினி(சுவிஸ்), இளமுருகன் (நெதர்லாந்து), மகேசலிங்கம்(பிரான்ஸ்) காலஞ்சென்ற மகேந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் , காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், தில்லைநடேசு, புவனேஸ்வரி மற்றும் மகேந்திரன்,ரோகினி, இராதாகிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரியும் ,காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து,நாகம்மா,வள்ளிப்பிள்ளை மற்றும் மீனாட்சி காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு அண்ணியும்

இராஜேஸ்வரி காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் அருணாச்சலம், யோகேஸ்வரி காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் வனஜமலர் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான விஜயரெட்ணம், பொன்னம்பலம், சரவணமுத்து, கார்த்திகேசு, கிருஷ்ணபிள்ளை, சொக்கலிங்கம் ஆகியோரின்சகலியும் சிவகுமார்+வினோதினி,தனேசன்+ சிந்துஜா, திலீப்குமார்+ சியாமினி, திலீபன்+தீபா, லமேசன்+ லக்ஷி, தயாளரூபன்+ரமணி, மயூரன்+திவ்யா, ரூபவினோத், துஷ்யந்தன்+தக்ஷிகா, ரிஷிகாந்தன், ரூபதாசன்+ரிஷிதா, கௌரீஸ்வரன், அபிரா, அபர்ணா, துஷானந்த், துஷானி, ஜெகரூபன், ஜெனிக்கா, ஜென்சிகா, மயூரன், மதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்வின், அஞ்சனா, ரிவிஷா, சிறாஸ், தியாறா, திவிஷா, தில்லானா லதிஷா, லவின், லியோன், லியானா, றியானா, றிசோன், றியோன், சுஜித், சஜித், சர்ஜின், ஆகியோரின் பூட்டியும், கிருஷ்ணசாமி, காலஞ்சென்ற குருசாமி மற்றும் தில்லைநாயகி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2022.06.07 ஆம் திகதி அன்று 95 RUE MARCEL SEMBAT, 93430 VILLETANEUSE, FRANCE இல் இடம்பெற்று தகனம் செய்யப்படும். அத்துடன் அன்னாரின் நயினாதீவு இல்லத்தில் 07.06.2022 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணியளவில் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் இடம் பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(11766)

வீரதாயகம்,
நயினாதீவு,08.

077 127 1809
077 045 4924

பிரிவினால் தவிக்கும்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் - 2022
# மூளாய் விக்டோறி 2 ஆவது சுற்றுக்கு தகுதி

கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் 1 ஆவது சுற்றில் 6 ஆவது போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் மூளாய் விக்டோறி அணி, T.C.C. அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மூளாய் விக்டோறி அணி களத்தடுப்பை மேற் கொண்டனர். முதலில் துடுப்பெடுத்தாடிய T.C.C. அணி 30 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றனர்.

றொகான் - 34, சிவராஜ் - 19, ரஜிந்தன் - 60, சுரேஸ் - 13 முரளி ஆட்ட மிழக்காது 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விக்டோறி அணி சார்பாக ஜங்கரன், பத்மபிரியன், சரத்குமார் தலா 2 விக்கெட்டுகளையும் , வேணுதாஸ், சிந்துஜன் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

173 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்டோறி அணி 29.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக் களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றனர். பத்மபிரியன்-51, சரத்குமார்-23, ஜங்கரன்-32, லம்போத ரன்-27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் T.C.C. அணி சார்பாக சிவராஜ் - 03, சுரேஸ் - 2, தர்சிகன், சுஜன் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர். இப்போட்டியில் சிறந்த வீரராக விக்டோறி அணியைச் சார்ந்த பத்ம பிரியன் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் தர வரிசை பட்டியலுக்கு விக்டோறி அணி 5.97 புள்ளிகளையும் T.C.C. அணி 2.42 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (4)


## பரிசில் நாளில்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## கிளி/ தர்மக்கேணி அ.த.க. பாடசாலை




2020 இல் நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றி சித்திபெற்ற மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் 2021 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த வகுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் இவர்கள் அனைவரையும் வழிப்படுத்தி நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்
கிளி/ தர்மக்கேணி அ.த.க. பாடசாலை
விளம்பர அனுசரணை :
திரு. கனகசிங்கம் திருச்செல்வம் (நலன்விரும்பி, லண்டன்)
திருமதி நிலாஜினி திருச்செல்வம் (பழைய மாணவி, லண்டன்)

(C-4444)


### பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்
# மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்லியாடெக் சம்பியன்

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடைபெற்று வந்தது.இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உலகின் நம்பர் வன் வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாடெக், அமெரிக்காவின் கோகோ காப்பை எதிர் கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஸ்வியாடெக் 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

இது அவர் வெல்லும் இரண்டாவது பிரெஞ்சு ஓபன் பட்டம் ஆகும், பிரெஞ்ச் ஓபன் இறுதிப் போட்டியில் பெற்ற வெற்றி மூலம், தொடர்ந்து 35 போட்டிகளில் வெற்றிகளை குவித்த பெருமையை இகா ஸ்வியாடெக் பெற்றுள்ளார். இதன் மூலம் வீனஸ் வில்லியம்சின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2632

### ஷரிஸ்

மூடி இருக்கும்
உள்ளத்திற்கும்
உள்ளங்கைக்கும்
மதிப்பு சற்று
அதிகமாகவே இருக்கும்....

### பிருத்தி




### வருணி

அடிக்கடி கரெண்டு போயிடுது சட்னி, சாம்பார்னு ரெண்டு நாளைக்கு தேவையானத ப்ரீட்ஜ்ல ஸ்டாக் வைச்சிட்டேன்னு பெருமை பேசிக்கிறா பொண்டாட்டி



கரெண்ட்டு இல்லாத சமயத்தில ப்ரீட்ஜ் மட்டும் எப்படி வேலை செய்யும்னு கேட்டா அடிக்க வர்ரா

### ரஞ்சன்

நிம்மதியாக இருக்க ஆசைப்பட்டு எதையும் தேடி அலையாதே...!!



கிடைத்ததை அனுபவிக்க கற்றுக்கொள் நிம்மதி உன்னைத் தேடிவரும்

### வைஷ்ணவி

கடலில் கல் எறிவதால் கடலுக்கு
வலிப்பதில்லை...!
அதற்கு
மாறாக கல்தான்
காணாமல் போகிறது...!
அதுபோலவே நம் வாழ்விலும் நம்
மீது வீசப்படும் விமர்சனங்கள்
கல்லாக இருக்கட்டும்
நாம் கடலாக இருப்போம்...!

### செல்வம்

பணக்காரன்
ஏழையிடம்
திருடும் போது அது
வணிகம் அரசு
ஏழையிடம் திருடும்
போது அது வரி
ஏழை இந்த
இரண்டுக்கும்
எதிராக போராடினால்
அது வன்முறை என
அழைக்கப்படுகிறது.
-மார்க் ட்வயன்-



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசர் நாய்க்கடிக்கான மருந்துக்கு தட்டுப்பாடு

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

**விசர் நாய்க்கடி நோய்க்கு வழங்கப்படும் ஊசி மருந்துக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால், இந்த நோய் ஏற்படுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கூடிய விரைவில் வீட்டுச் சூழலில் வளர்க்கப்படும் நாய்களுக்கு தடுப்பூசிகளை செலுத்துமாறு பொது சுகாதார கால்நடை மருத்துவ சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.டி.கித்சிறி ஆலோசனை வழங்கியுள்ளார்.

விசர் நாய்க்கடி நோய் காரணமாக வருடாந்தம் சுமார் 25 முதல் 30 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்த வருடத்தில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் மற்றும் பூனைகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதன் மூலம் நோயை கட்டுப்படுத்த முடியும் எனவும் கித்சிறி தெரிவித்துள்ளார்.

விசர்நோய் ஏற்பட்டுள்ள விலங்குகள் மனிதர்களை கடித்தால், மனிதர்களுக்கு விசர் நோய்ஏற்படும் எனினும்அதனை குணப்படுத்த தேவையான மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# 21 ஆவது திருத்தம் நிறைவேறினால் பலரின் எம்.பி. பதவிக்கு ஆப்பு

(கொழும்பு)

அரசமைப்பின் 21 ஆவது திருத்த சட்டமூலம் நிறைவேறினால் 10 பேருக்கு எம்.பி.பதவி பறிபோகும் நிலை ஏற்படும் என ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, இரட்டை குடியுரிமை உடைய 10 அரசியல்வாதிகள், தற்போதைய பாராளுமன்றத்தில் எம்.பி. பதவியை வகிக்கின்றனர்.

இரட்டை குடியுரிமை உடையவர்கள், பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கு அரசமைப்பின் 21 ஆவது திருத்த சட்டமூலத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த சட்டமூலம் நிறைவேறினால் அந்த 10 அரசியல்வாதிகளும் எம்.பி.பதவியை இழக்க நேரிடும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 21 ஆவது திருத்த சட்டமூலத்தில் உள்ள 'இரட்டை குடியுரிமை தடை' என்ற ஏற்பாட்டை நீக்கிக்கொள்வதற்கு இவர்கள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி)

# ரஷ்ய விமான விவகாரம்

## இரு நாடுகளுக்கான பிரச்சினை அல்ல இது சட்ட ரீதியான பிரச்சினை

### பிரதமர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஏரோஃப்ளோட் விமானம் தொடர்பான பிரச்சினை இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினையல்ல என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக பிரதமர் இந்த விடயத்தினை ரஷ்யாவிற்கு அறிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் பிரச்சினையானது சட்ட ரீதியான பிரச்சினையே என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ஓய்வு பெறும் வயதெல்லையில் மாற்றம்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை குறைக்க முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்பொழுது 55 வயதில் தங்களுடைய சுய விருப்பத்திற்கு அமைய ஓய்வு பெற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 3 வருடங்களாக குறைத்து 62 ஆக நிர்ணயிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# தபால் கட்டணங்களை உயர்த்துமாறு கோரிக்கை

(கொழும்பு)



தபால் கட்டணங்களை உயர்த்துமாறு தபால் திணைக்களத்தினால் அரசாங்கத்திடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

சாதாரண தபால் கட்டணத்தை 15 ரூபாவிலிருந்து 20 முதல் 40 ரூபா வரையில் உயர்த்தப்பட வேண்டுமெனவும், அதிவேக தபால் சேவைக்கான கட்டணத்தை 55-65 ரூபாவிலிருந்து 200 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டில் தபால் திணைக்களம் 7.2 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது.

தபால் கட்டணங்கள் உயர்த்தப்படாவிட்டால் நட்டம் காரணமாக தபாலகங்கள் மூடப்பட வேண்டிய நிலை உருவாகும் என தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (நி)

# ஜப்பான் தூதுவராக ஜயநாத் கொலம்பகே?

(கொழும்பு)

வெளியுறவு செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஜயநாத் கொலம்பகே, ஜப்பானிய தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதற்காக அவரது, தனிப்பட்ட பின்னணி அடங்கிய ஆவணம், ஏற்கனவே ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

அந்த ஆவணம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவர் ஜப்பானிய தூதுவராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# இராசிபலன்

06.06.2022
வைகாசி 23, திங்கட்கிழமை
சப்தமி பின்னிரவு 4.08 மணிவரை

மகம் முன்னிரவு 11.14 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்திராடம், திருவோணம்

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், தாழ்ந்த சுபாவ முண்டு, வழிபாடு ஆனந்தம் தரும்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுபசெய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு, தொழிலில் ஆர்வம் கூடும்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், போசன சுகமுண்டு.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.




வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும், கூடும் வாய்ப்புண்டு.




தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.




பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை யில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வரம் தர வேண்டிய தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.




வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள், தேகா ரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள் பயணங்கள் கைகூடும்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவழித்து நிம்மதியாயிரு, ஆனால் வீணாக்காதே.

# பூரணப்படுத்தப்படாத நிலையில் மீள்குடியேறிய மக்களின் வீட்டுத்திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் மீள்குடியேற்ற கிராமமான முகமாலை கிராமத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக மீள்குடியேறிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முகமாலை கிராமமானது யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும் என்பதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஒரு பகுதியாகவும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் மீள் குடியேறிய மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் இதுவரை வழங்கப்படாமை மற்றும் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்ற போதும் குறித்த வேலைத்திட்டங்கள் முன்னெடுகபடாத நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க கூடிய வகையில் காணப்படுகின்ற கோவானைக்குளம் முகமாலை குளம் வண்ணாந்துறை குளம் என்பன கடந்த 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற குளங்களை புனரமைத்து தருவதன் மூலம் இந்தப் பிரதேசத்தில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புகளை முன்னெடுப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (4-315)

# புதுப்பொலிவு பெற்ற கோம்பயன் மணல் இந்துமயானம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணனின் "தூய நகரம்" திட்டத்திற்கு அமைய யாழ்.மாநகர சபையினதும் கோம்பையன் மணல் இந்து மயான பரிபால சபையினதும் மற்றும் நன்கொர்டையாளர்களின் நிதிப்பங்களிப்புடன் புதுப்பொலிவு பெற்ற யாழ்.கோம்பயன் மணல் இந்து மயான நுழைவாயில் மற்றும் வைரவர் ஆலயக் கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் முதல்வர் வி. மணிவண்ணன் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டார். (4-18-33)

# தீப்பிடித்து எரிந்த மோட்டார் சைக்கிள்




(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதியில் உள்ள வாகன திருத்துமிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து எரிந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வாகனத் திருத்துமிடத்தில் மோட்டார் சைக்கிளின் பாகம் ஒன்று மின்சாரம் மூலம் ஒட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது தீபற்றியுள்ளது. இதனையடுத்து வாகன திருத்துமிடத்தில் இருந்தவர்கள் தீயை அணைக்க முயற்சித்தபோதும் மோட்டார் சைக்கிளின் பெரும் பகுதி தீயில் எரிந்து நாசமாகியது. (4-33)

நாட்டின் இன்றைய பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் ஏற்பாட்டில் புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஜே-208 கிராம சேவகர் பிரிவில் 55 வீட்டுத் திட்டத்தில் உள்ள 45 குடும்பங்களுக்கு 225,000 ரூபாய் பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டது.(படம்-ரவிசாந்)



# இலங்கை அண்டைய நாடுகளின் மாநிலமாக உருவாக வாய்ப்பு

## சாவ.பிரதேசசபை தவிசாளர்

(சாவகச்சேரி)

இக்கட்டான நிலைமையில் கூட வறிய மக்களுக்கு உதவ முடியாத உள்ளூராட்சி சபைகளை கட்டிப் பாதுகாப்பதனை விட அவற்றை கலைத்து விடுவது சிறப்பான விடயமாக அமையும் என சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தேவையற்ற ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலையில் அனைவரும் காணப்படுகிறோம்.

கடந்த வருடம் நாட்டில் உர இறக்குமதிக்கு தடை விதித்த போது பாதிக்கப்பட்ட விவசாயிகள் வீதிக்கு இறக்கினார்கள். அதை ஏனையவர்கள் வேடிக்கை பார்த்தார்களே தவிர எவரும் விவசாயிகளுக்கு கை கொடுக்க முன்வரவில்லை. ஆனால் அன்று விவசாயிக்கு கை கொடுக்காத பலரும் இன்று பல விதமான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அரச உத்தியோகத்தர்கள் எதைப் பற்றியும் சிந்திக்காதவர்களாக உள்ளனர்.நாட்டில் இடம்பெறுகின்ற பிரச்சனைகளை வேறு யாருடையதோ பிரச்சினையாகவே அவர்கள் இன்றும் பார்க்கின்றனர்.அரசு சம்பளம் வழங்க பணத்தை அச்சிடுகிறது. பணம் அச்சிடுவது பண வீக்கத்தை வெகுவாக அதிகரிக்கும்.ரூபாவின் பெறுமதியைக் குறைக்கும். மக்களுக்காக வீதிக்கு இறங்கி இருக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் அவர்களது சம்பளம் நிறுத்தப்படும் போதே வீதிக்கு இறங்குவார்கள்.

அப்போது நாட்டில் எதுவுமே இருக்காது.நாட்டை கட்டியெழுப்ப ஒரு தலைமைத்துவம் இருக்காது.தலைவன் இல்லாத குடும்பம் எவ்வாறு சீரழியுமோ அதே நிலை நாட்டிற்கு ஏற்படும்.புதிய தலைமைத்துவத்தை தேடும் நிலை உருவாகும்.அத்தோடு இந்தியா, சீனா போன்ற அண்டை நாடுகளால் அரவணைக்கப்படும் ஆபத்தான நிலைமையும் காணப்படுகிறது.

அண்டை நாடுகளின் மாநிலமாகக் கூட உருவாகும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகிறது.இந்த இக்கட்டான தருணத்தில் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம் எனத் தெரிவித்தார். (4-30)



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியினை அகலித்து அதில் வடிகால் மற்றும் நடை பாதைகளை அமைப்பதற்கு ஏற்ற வகையில் அவ் வீதியிலுள்ள மின்கம்பங்களை பின் நகர்த்துகின்ற பணியினை இலங்கை மின்சார சபை நேற்று ஆரம்பித்தது. (படம்-சிவசாந்தன்)



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா ஆரம்பமான நிலையில் ஆலய திருநாட்களின் ஒன்றான கடல் அந்தோனியார் பெருவிழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)



யாழ்.போதனா மருத்துவமனைக்கு உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ் மருந்துப் பொருட்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண போதனா மருத்துவ மனை பணிப்பாளர் நந்த குமாரிடம் நேரடியாக வழங்கி வைத்தார். (படம்- சிவசாந்தன்,ரவிசாந்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கும் வெளிநாடு செல்லும் வாய்ப்பு

## அமைச்சர் தினேஷ் குணவர்தன



(கொழும்பு)

தொழில் அல்லது வேறு எந்த நோக்கத்திற்காகவும் வெளிநாடு செல்ல விரும்பும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டு கால சம்பளமில்லாத விடுமுறை திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்

இது குறித்து ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரச ஊழியர்கள் ஐந்தாண்டுகளின் முடிவில் சம்பளம் இல்லாத விடுமுறைக்காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் சகல சலுகைகளுடனும் அவர்களின் பதவியுயர்வு மற்றும் தரங்களை மீளப் பெறுவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அரசு ஊழியர்கள் வெளிநாட்டிற்கு வேலை வாய்ப்புக்காக செல்வதற்கு ஊக்கம் கிடைக்கும்.

எனவே, இத்திட்டம் அரச ஊழியர்களுக்கு பல நன்மைகளை வழங்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

## சிறுவர்கள் மத்தியில் பரவி வரும் புதிய வைரஸ்

### அவதானத்துடன் செயற்படுமாறு கோரிக்கை

(கொழும்பு)

அண்மைய நாட்களில் சிறுவர்கள் மத்தியில் பரவி வரும் கை, கால், வாய் தொடர்பான வைரஸ் நோய் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு மேல் மாகாண முன்பள்ளிப் பிரிவின் பணிப்பாளர் மஹிந்த கொடித்துவக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவித்துள்ளார்.

முன்பள்ளியில் கை,கால், வாய் தொடர்பான வைரஸ் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் முன்பள்ளி ஆசிரியர்களிடம் மேலும் கேட்டுக் கொண்டார். (நி)

## இலங்கைக்கு உதவுமாறு உலக நாடுகளிடம் ஐ.நா.வேண்டுகோள் விடுக்கும்- பீரிஸ் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு மருந்து, உணவுப்பொருட்களை அவசரமாக வழங்குமாறு ஐ.நா வேண்டுகோள்விடுக்கும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜிஎல்பீரிஸ் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலக உணவு ஸ்தாபனம் ஐக்கிய நாடுகளின் உணவு அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தே ஐ.நா இந்த வேண்டுகோளை விடுக்கவுள்ளது.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உணவு விவசாய ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி விம்லேந்திர சரான் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மலின் ஹேர்விக் ஆகியோருடன் நாட்டின் தற்போதைய உணவு நிலை குறித்து பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தே ஐ.நா இந்த வேண்டுகோளை விடுக்கவுள்ளது. (நி)

## பொருளாதார நெருக்கடிக்கு இதுவரை தீர்வு எதுவுமில்லை

### நாம் எத்தனை வேளை சாப்பிட வேண்டும் என தீர்மானிக்க ஒரு பிரதமர் தேவையில்லை



(கொழும்பு)

சிறுபோகப் பயிர் செய்கைக்கு உரிய நேரத்தில் இரசாயன பசளைகளை வழங்காது 'தம் பட்டம் அடிக்கும் கோட்டா - ரணில் இரட்டையர், எதிர்காலத்தில் ஏற்பட போகும் உணவு நெருக்கடிக்கு வழங்கப் போகும் தீர்வு என்ன என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக எதிர்காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படும் என்ற கடும் அச்சத்திலும் உணர்விலும் பொதுமக்கள் இருக்கின்றனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி ஜனாதிபதி கமத்தொழில் தொடர்பாக எடுத்த தவறான முடிவுகள் காரணமாக உணவு பற்றாக்குறை ஏற்படும் நிலைமையை நாடு தற்போது எதிர்நோக்கி வருகிறது.

நெருக்கடிக்கு சரியான தீர்வைத் தேடி, உணவு உற்பத்திக்காக அரசாங்கம் வேலைத்திட்டத்தை முன்வைக்க தவறியுள்ளது. இதனால், அரசாங்கத்தில் இருக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீண்டும் வழமை போல் பொறுப்பற்ற வகையில் பல்வேறு கதைகளைக் கூறிவருகின்றனர்.

இதன் மூலம் நாட்டுக்கு தொடர்ந்தும் அனர்த்தமே ஏற்படும். சிறுபோகப் பயிர் செய்கை ஆரம்பித்து குறிப்பிடத்தக்களவு காலம் கடந்துள்ளது. தேவையான இரசாயன பசளைகள், கிருமிநாசினிகள் இல்லை.

விவசாயத்திற்கு தேவையான பசளை உள்ளிட்டவற்றை வழங்க நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தேசிய சேதனப் பசளை உற்பத்தியாளர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட பசளைக்கான பணத்தையும் இதுவரை செலுத்தவில்லை.

நாடு எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சரியான வேலைத்திட்டத்தை முன்வைக்க கோட்டா - ரணில் அரசாங்கம் தவறியுள்ளது. அத்துடன் இந்த பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எந்த உணர்வுமில்லை.

பயிரிட வேண்டாம் என ஜனாதிபதி கூறுகிறார். மரவள்ளி கிழங்கை பயிரிடுமாறு பிரதமர் கூறுகிறார். கமத்தொழில் அமைச்சர் காடுகளில் உள்ள பலாக்காய்களை சாப்பிடுமாறு கூறுகிறார்.

இதனிடையே நாம் சாப்பிட வேண்டிய உணவுகளையும், எத்தனை வேளை சாப்பிட வேண்டும் என்பது பற்றியும் பிரதமர் கூறுகிறார். நாம் தினமும் எத்தனை வேளை சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்ய நாட்டுக்கு பிரதமர் ஒருவர் தேவையில்லை எனவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (நி)

## மூன்று மாதங்களில் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு!

### தேசிய கமத்தொழிலாளர் ஒன்றியத் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இன்னும் மூன்று மாதங்களில் கடுமையான அரிசித் தட்டுப்பாடு தொடர்பான நெருக்கடி ஏற்படும் என தேசிய கமத்தொழிலாளர் ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

சாதாரணமாக இலங்கைக்கு ஒரு மாத காலத்திற்கு 2 இலட்சத்து 80 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுகிறது. எனினும் அரச நெற்களஞ்சியங்களில் ஒரு மெற்றிக் தொன்னுக்கும் குறைவான நெல்லே இருக்கின்றது. கமத்தொழிலாளர்கள் தமது பயன்பாட்டுக்காக மூன்று இலட்சம் மெற்றிக்தொன் நெல்லை தம்வசம் வைத்துள்ளனர்.

மிகப் பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் மேலும் 10 இலட்சம்மெற்றிதொன் அரிசியை வைத்துள்ளனர். இந்த தொகையானது எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை மாத்திரமே போதுமானதாக இருக்கும்.

சிறுபோகப் பயிர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதால், உற்பத்தி குறைந்துள்ளது. இதன் காரணமாக உற்பத்தி செய்யப்படும் நெல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னர் நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானோருக்கே போதுமானதாக இருக்கும்.

இதனால், மீதமுள்ள 80 வீதமான மக்களுக்கு அரிசி கிடைப்பது பாரதூரமான சிக்கலாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)



குருநகர் கரையோரப் பகுதியில் எழுந்தருளி இருக்கும் வேளாங்கண்ணி அன்னையின் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி பி.ஜே ஜெபரெட்ணம் அடிகளார் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. (படம்-ஏனெஸ்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 63

# உங்கள் பக்கத்தில் இருப்பவர் யார்? கொஞ்சம் கண் திறந்து பாருங்கள்



நள்ளிரவில் 100 கி.மீ வேகத்தில் சென்று கொண்டிருந்த கார் திடீரென்று நின்றது.

டிரைவர் சீட்டுக்கு பக்கத்து சீட்டில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்த என் நண்பரை டிரைவர் தட்டி எழுப்பினார்.

"சார் பின்னாடி போய் உட்காருங்க... நீங்க தூங்கி தூங்கி வழியிறத பார்த்தா எனக்கும் தூக்கம் வருது"....

தூங்கி கொண்டிருந்த நண்பர் பின்னால் உட்கார்ந்து, விட்ட தூக்கத்தை தொடர ஆரம்பித்தார்.

என்னால் தான் தூங்க முடியவில்லை. டிரைவர் சொன்ன வார்த்தைகளைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தேன்...

பல நேரங்களில் நம் செயற்பாடுகள் கூட நம் பக்கத்தில் இருப்பவரை பொறுத்துத்தான் இருக்கிறது...

சுறுசுறுப்பான மனிதர்கள் அருகில் இருக்கையில் மெல்ல அந்த சுறுசுறுப்பு நம்மையும் தொற்றிக்கொள்கிறது...

சோம்பேறிகள் பக்கத்தில் இருக்கும்போது மெல்ல மெல்ல அந்த சோம்பேறித்தனம் ஒட்டிக்கொள்கிறது.

இந்த லாஜிக்கால் தான் தூங்குபவரை பக்கத்தில் வைத்துக்கொள்ள டிரைவர்கள் விரும்புவதில்லை...

எனவே முன்னேற விரும்பினால் நீங்களும் "யோசியுங்கள்"....

உங்கள் பக்கத்தில் இருப்பது "யார்..?"

உற்சாகமானவரா..?

சுறுசுறுப்பானவரா..?

நம்பிக்கையானவரா?

விரக்தி எண்ணம் உள்ளவரா?

இடித்துரைக்க, எடுத்துச் சொல்ல நல்ல மனிதர்களை தன் அருகில் வைத்துக் கொள்ளாததாலேயே வீழ்ந்தவர்கள் பலர்...

மிகப் பெரிய வணிக சாம்ராஜ்யங்களை ஆண்டவர்கள் தங்கள் பக்கத்தில் இருந்த தவறான நபர்களால் வீழ்ந்திருக்கிறார்கள்.

எனவே உங்களுக்கும் உங்கள் வெற்றிக்கும் இருக்கும் தொடர்பை போலவே உங்கள் அருகில் இருப்பவருக்கும் கூட தொடர்பு இருக்கிறது.

இலட்சியம் இல்லாதவர்களை நண்பர்களாக ஏற்காதீர்கள்...

இலட்சியமும் அதை அடைய வேண்டும் என்று எப்போதும் துடிப்பவர்களாக தேடி நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்...

உங்கள் அருகில் உள்ளவர்களால் நீங்கள் உற்சாகம் பெறுவதைப் போலவே உங்களைப் பார்த்து மற்றவர்களும் எழுச்சி பெற வேண்டும் என்று நினையுங்கள்...


எல்லோரையும் ஊக்கப்படுத்துங்கள். உங்கள் அருகில் இருக்கும் அனைவரும் உற்சாகம் அடைந்தால் உங்களின் அருகாமையினை அனைவரும் விரும்புவார்கள்.

கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்கள்.

உங்கள் பக்கத்தில் இருப்பது யார்...?

யாராக இருந்தாலும் ஒன்று உங்களை உற்சாகப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

அல்லது உங்களால் உற்சாகம்
பெறுபவராக இருக்க வேண்டும்...
தீதும் நன்றும் பிறர்தர வாரா...



Kelan Keerthana

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## தென்கொரியா, அமெரிக்கா கடற்படை பயிற்சி

### ஏவுகணைகளை ஏவி எச்சரித்த வடகொரியா

(பியாங்யாங்)

வடகொரியா தனது கிழக்குக் கடற்கரையில் உள்ள கடலை நோக்கி எட்டு குறுகிய தூர ஏவுகணைகளை பரிசோதனை செய்துள்ளது.

தென்கொரியா, அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாடுகள் இணைந்து கடற்படை பயிற்சிகளை முடித்த ஒரு நாளின் பின்னர் இந்த சோதனையை மேற்கொண்டுள்ளது.

வடகொரிய தலைநகரின் சுனான் பகுதியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏவுகணைகள் ஏவப்பட்டதாக தென்கொரியா கூட்டுப்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை சந்தேகத்திற்கு இடமான கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா ஏவிவிட்டதாக ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் வட கொரியா நடத்திய 18 ஆவது சுற்று ஏவுகணை சோதனை இது என தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# உலகளா...

# மேற்கத்...

### ரஷ்ய ஜன...

(மொஸ்கோ)


உக்ரைனில் இருந்து ...
பாதுகாப்பான பாதையை...
வழங்கும் என ரஷ்ய ஜனா...

ரஷ்யா, உக்ரைன் போர் 100வது நாளை தாண்டிய நிலையில், இரு நாடுகளில் இருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படாமல் இருக்கிறது.

இதனால் ஆபிரிக்க நாடுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் உணவுப் பஞ்சம் ஏற்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### கப்பல் எதிர்ப்பு ஏவுகணை உள்ளிட்ட

# அதி நவீன ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கும் சுவீடன்



(கீவ்)

உக்ரைனுக்கு தனது மூன்றாவது உதவிப் பொதியை வழங்குவதாக, சுவீடனின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், சுவீடனின் ரோபோ-17 நன்கொடையானது உக்ரைனிய இராணுவத்திற்கு மிகவும் தேவையானதொன்றாக கருதப்படுகின்றது.

ரோபோ- 17 அமைப்பைத் தவிர, 102 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகுப்பில் உக்ரைனிய மத்திய வங்கியின் நிதி மற்றும் உக்ரைனிய ஆயுதப் படைகளுக்கான நேட்டோவின் நிதி ஆகிய இரண்டிற்கும் நிதியுதவியும், 5,000 டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளும் ஏ.டி.4 இலகுரக ஆயுத எதிர்ப்பு ஆயுதங்களும் அடங்கும்.

தென்கிழக்கு உக்ரைனின் கடலோரப் பகுதிகளில் அதிகரித்து வரும் ரஷ்யப் பிரசன்னத்தை நிவர்த்தி செய்ய உக்ரைன் அரசாங்கத்தால் குறிப்பாக ரோபோ- 17 இன் விநியோகம் கோரப்பட்டது என்று சுவீடிஷ் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

# பங்களாதேஷில் பயங்கர தீ விபத்து

## 5 பேர் பலி; 100 பேர் வரை காயம்

(டாக்கா)

பங்களாதேஷ் தென்கிழக்கு நகரத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் உள்ள பாரிய கொள்கலன் சேமிப்பு கிடங்கொன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் குறைந்தது ஐந்து பேர் பலியாகினர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ாவிய உணவு நெருக்கடிக்கு
# ந்தேய நாடுகள் தான் காரணம்

## னாதிபதி விளாடிமிர் புடின்

**து தானியங்களை ஏற்றுமதி செய்யும் கப்பல்களுக்கு**
**யை வழங்குவதற்கான சலுகைகளை தனது அரசாங்கம்**
**னாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.**



இதற்கு ரஷ்யாதான் காரணம் என மேற்கத்தேய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்நிலையில் வளர்ந்து வரும் உலகளாவிய உணவு மற்றும் எரிசக்தி நெருக்கடிகளுக்கு மேற்கத்தேய நாடுகள் தான் காரணம் என புடின் குற்றம் சாட்டினார்.

இது குறித்து பேசிய அவர், உலக உணவு சந்தையில் என்ன நடக்கிறது என்பதையும், அது சந்தித்து வரும் பிரச்சினை களையும் ரஷ்யாவின் மீது திருப்புவதை காண முடிகிறது.

மேலும், ரஷ்யாவிற்கு எதிரான மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் உலகச் சந்தைகளை மோசமாக்குவதுடன், உற்பத்தியை குறைத்து விலைகளை உயர்த்துகின்றன. உக்ரைனில் இருந்து தானிய ஏற்றுமதியை ரஷ்யா தடுக்கவில்லை.

ஆனால் மேற்கத்தேய நாடுகள் உணவுப் பிரச்சினைகளுக்கு ரஷ்யாவை குற்றம் சாட்டி வருகின்றன.

உக்ரைனில் இருந்து தானியங்களை ஏற்றுமதி செய்யும் கப்பல்களுக்கு பாதுகாப்பான பாதையை வழங்குவதற்கான சலுகைகளை தனது அரசாங்கம் வ்ழங்கும். இவ்வாறு புடின் தெரிவித்தார். (நி)

## ஆயுதங்களுடன் சென்ற உக்ரைன் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா அறிவிப்பு

(கீவ்)


கருங்கடல் துறைமுகமான ஒடேசா அருகே ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற உக்ரைன் இராணுவ விமானத்தை தமது படைகள் சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவி. த்துள்ளது.

அத்துடன், உக்ரைனின் சுமி பிராந்தியத்தில் வெளிநாட்டு பயிற்றுனர்கள் பணியாற்றிய பீரங்கி பயிற்சி மையத்தின் மீதும் ஏவுகணை தாக்குதல் நடத்தி அழிக்கப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிழக்கு உக்ரைனில் ஸ்வியாடோகிர்ஸ்க் லாவ்ராவில் உள்ள பழைமையான மடாலயம் நேற்று முன்தினம் தீப்பற்றி எரிந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு 300 அகதிகள், மாற்றுத்திறனாளிகள், முதியோரகள், 60 குழந்தைகள் உள்ளிட்டோர் தங்கி இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

ரஷ்யப் படைகளின் தாக்குதல்கள் காரணமாகவே மடாலயம் தீப்பற்றி எரிந்ததாக உக்ரைன் இராணுவ அதிகாரி யூரி கோசேவெங்கோ பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார். (நி)



## அவுஸ்திரேலியாவிலுள்ள தீவுக்கு ராணியின் பெயர்



(கன்பெரா)

அவுஸ் திரேனியாவின் கன்பெராவில் உள்ள ஆஸ்பென் தீவு எலிசபெத் II தீவு என பெயர்சூட்டப்பட்டுள்ளது.

இங்கிலாந்து ராணி எலிசபெத் அரியணை ஏறி 70 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் இவ்வாறு ஆஸ்பென் தீவுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த விழாவில் பங்கேற்ற அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் இந்த தருணம் பொக்கிஷம் போல பாதுகாக்கப்பட வேண்டியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

1957 ஆம் ஆண்டு இங்கிலாந்து பரிசளித்த நேஷனல் கேரிலான் இசைக்கருவிகுயின் எலிசபெத் II தீவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சீன ஆய்வு நிலைய இறுதிப் பணிகளுக்காக விண்வெளிக்கு வீரர்களை அனுப்பிய சீனா

(பியாங்யாங்)

சீனா விண்வெளியில் நிறுவி வரும் தனது சொந்த ஆய்வு நிலையத்தின் இறுதிப் பணிகளை நிறைவேற்றுவதற்காக 3 விண்வெளி வீரர்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை விண்வெளி நிலையத்திற்கு அனுப்பியது.

சீனாவால் தனியாக நிறுவப்பட்டுக்கொண்டிருக்கும் டியாங் கொங் விண்வெளி நிலையத்தில் இந்த விண்கலம் இணைக்கப்பட்டதும் அதில் இறங்கி அந்த நிலையத்தை முழுமையாகக் கட்டமைக்கும் பணியில் மூன்று விண்வெளி வீரர்களும் ஈடுபடுவார்கள். 6 மாதங்களில் விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் இவர்கள் டியாங்கொங் விண்வெளி நிலைய இறுதிக்கட்ட பணிகளை பூர்த்தி செய்யவுள்ளனர்.

ரஷ்யாவால் உருவாக்கப்பட்டு, பல நாடுகளின் கூட்டு முயற்சியில் செயற்பட்டு வரும் தற்போதைய உலகின் ஒரே விண்வெளி ஆய்வகமான சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு (International Space Station - ISS) போட்டியாக சீனா உருவாக்கி வரும் டியாங்கொங் விண்வெளி நிலைய கட்டுமாணப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீன விண்வெளி நிலையம் செயற்படத் தொடங்கினால் தனக்கென்று சொந்தமாக விண்வெளி நிலையத்தை வைத்திருக்கும் ஒரே நாடு என்ற பெருமையை சீனா பெறும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசளையை இறக்குமதி செய்தால் பட்டினி சாவை தடுக்கலாம்

## செல்வம் அடைக்கலநாதன்

**(நெளுக்குளம்)**

**பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்ற போது கஞ்சியாவது குடித்து மக்கள் இருக்கின்ற வாழ்க்கையை உண்டு பண்ணலாம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளார்.**

பொருளாதார நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள் ளார்.


அவர் மேலும் கருத்து தெரி விக்கையில்,

விவசாயிகள் சேமித்து வைத்த அரிசிகள் அனைத்தும் இரண்டு . மூன்று மாதங்களில் முடிவடையக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இனிவரும் காலங்களில் பட்டினி சாவுகள் வருவதற்கான வாய்ப்புக்களே கூடுதலாக உள்ளது.

சாதாரணமாக உழைக்கி ன்ற அன்றாட கூலி செய்கின்ற மக்களுடைய நிலைமை மிக வும் மோசமாக, பரிதாபமாக இருக்கின்றது. அரசாங்கம் முத லிலே பசளையை இறக்கி விவ சாயிகளுக்கு கொடுக்கின்ற போது கஞ்சியாவது குடித்து மக்கள் இருக்கின்ற வாழ்க்கையை உண்டு பண்ணலாம்.

பசளையை இறக்கி விவசாயி களுக்கு கொடுப்பதன் ஊடாக நெல் உற்பத்தி பெருகும். அதே போல் தோட்டங்களை செய்கி ன்ற போது மரக்கறிகளை உற் பத்தி செய்கின்ற வாய்ப்புக்களும் ஏற்படும். அரசாங்கம் பசளையை



விவசாயிகளுக்கு இறக்கி கொடுப் பதன் ஊடாக தான் பட்டினியில் இருந்து மக்களை மீட்க முடியும் என தெரிவித்தார். (4-299)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உடுப்பிட்டி முருகேசு சிவசிதம்பரத்தின் 22 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்று நெல்லியடி பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக அமைக்க ப்பட்டுள்ள அவரின் சிலைக்கு சுடரேற்றி இடம் பெற்றது.

(படம்-மகாலிங்கம்)



தியாகி பொன் சிவகுமாரனின் 48 ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் உரும்பிராயில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையி னால் நேற்று காலை அனுஷ்டிக்கப்பட்டன.

(படம்:- ரவிசாந், சிவசாந்தன்)

# மண்ணெண்ணெய் பெற்று தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளாலி கடற் றொழிலாளர்கள் தமக்கான மண்ணெண்ணையை பெற் றுக் கொள்வதில் தொடர் ந்தும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் தமக்கான எரிபொருளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள னர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட கிளா லிப் பிரதேசத்தில் நூற்றுக் கும் மேற்பட்டோர் தமது வாழ்வாதார தொழிலாக கடற்றொழிலை முன்னெடு த்து வருகின்றனர்

இந்த நிலையில் தற்போது தமக்கு தேவையான எரிபொ ருளை பெற்றுக் கொள்வ தற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்து ள்ளனர்.

அதாவது நாள் ஒன்றுக்கு 8 தொடக்கம் 10 லீற்றர் மண் ணெண்ணெய் தமது தொழில் நடவடிக்கைகளுக்காக தேவை யான நிலையில் கடந்த ஏப் ரல் மாதம் கடற்றொழிலா ளர்கள் ஒருவருக்கு50 லீற்றர் மண்ணெண்ணையும் மே மாதத்தில் 40 லீற்றர் மண் ணெண்ணையும் மாத்தி ரம் வழங்கப்பட்டது ஆனால் அது போதுமானதாக இல்லை.

தற்போது எரிபொருள் இல் லாத நிலையில் தொழில் நடவடிக்கைகளை செய்வ தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் சுட்டி க்காட்டியுள்ளனர். (4-315)

# வடக்கு மாகாண விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக் கொடுங்கள்

## இந்தியாவிற்கு சிறீதரன் எம்.பி.கடிதம்


(கண்டாவளை)

வடக்கு மாகாண விவசாயிக ளுக்கான உரத்தை பெற்றுக் கொடுக்க இந்திய அரசு நடவடி க்கை எடுக்க வேண்டும் என இந்திய துணைத்தூதுவர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்க ரனுக்கு பாராளுமன்ற உறுப்பி னர் சி.சிறீதரன் நேற்று முன் தினம் கடிதமொன்றை அனுப்பி யுள்ளார்.

அக் கடிதத்தில், இலங்கை யில் தற்போது ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், இறக்குமதிக் கான தடை, எரிபொருள் தட்டுப் பாடு உள்ளிட்ட காரணிகளால், அனைத்துத் துறைசார்ந்தோ ரும் பாதிக்கப்பட்டுள்ள போதும், விவசாயிகளே அதிகூடிய தாக்க த்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த நாடு மிக மோசமான உணவுப் பஞ்சம் ஒன்றை எதிர்கொள்ள நேரிட லாம் என்பது துறைசார்ந்தோ ரின் எதிர்வுகூறலாக அமைந்து ள்ளது.

இத்தகு சூழலில் கடந்த வரு டத்திலிருந்து அமுலாகியுள்ள சேதனப் பசளைகள் மற்றும் கிருமிநாசினிகளுக்கான இறக்கு மதித் தடை, அதனால் சந்தை யில் இருப்பிலுள்ள பசளை வகைகளின் சடுதியான விலை யேற்றம், தற்போதைய எரி பொருள் விலையேற்றமும் தட் டுப்பாடும் உள்ளிட்ட பாதிப்புக் களை சமநேரத்தில் எதிர்கொ ள்ள வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளதால் நெற்பயிர்ச் செய்கை யில் ஈடுபடுவதற்குரிய மூலப் பொருட்களின் செலவைக்கூட அதன் அறுவடை மூலம் ஈட்டிக் கொள்ள முடியாத ஆகப்பெரும் அவலத்தின் விளிம்பிற்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ள னர்.



ஈழத் தமிழர்களின் நலனில் தொடர்ந்து அக்கறையும், கரி சனையும் கொண்டிருப்பதோடு, அதற்காக அயராது உழைத்து வரும் எம் தொப்புள்க்கொடி உறவான இந்தியா, எமது விவ சாயிகளுக்கு உதவும் பொருட்டு, ஏக்கருக்கு இரண்டு அந்தர் வீதம் ஆகக்குறைந்தது 8121 மெற் றிக்தொன் யூரியாப் பசளைகளை உடனடி உதவியாக வழங்க ஆவனசெய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. (4-315)



உலக சூழல் பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு கரையோர பாதுகாப்பு சபையுடன் இணைந்து நேற்றைய தினம் 500 மாங்குறூஸ் மரக்கன்றுகள் சாம்பல் தீவு களப்பு பகுதியில் green forest ceylon அமைப்பினரால் நடுகை செய்யப்பட்டன. (படம்:சிவசாந்தன்)

ஜூன் 5 உலகச் சுற்றுச் சூழல் தினத்தை முன்னி ட்டுத் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்புடன் கிராமச் செயலகங்களினால் சிரமதான நிகழ்வுகள் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டன.

(படம்:-ரவிசாந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களிடையே அதிகரிக்கும் மந்த போசனை

## போசனை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு) இலங்கையில் பாடசாலை செல்லும் 5 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய மாணவர்களில் பத்தில் இருவர் மந்த போசனையுடன் உள்ளதாக இலங்கை போசனை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.**

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். கொவிட-19 பரவலை தொடர்ந்து எதிர்வரும் காலத்தில் ஏற்படக்கூடிய உணவுத் தட்டுப் பாடு தொடர்பில் இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது.

அத்துடன் மக்கள் தற்போது கொள்வனவு செய்யும் உணவுப் பொருட்களில் ஊட்டச் சத்து போதுமானதாக இல்லை எனவும் மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி)

# பசிலின் பிரேரணைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்வைத்த யோசனைகளை இடைநிறுத்துவதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது



அந்த வகையில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்வதற்கான முன்மொழிவு. 4,917 உள் ளூராட்சிப் பிரிவுகளுக்கு தலா 4 மில்லியன் ரூபாய். மொத்தம் 19.67 பில்லியன் என்பது இடைநிறுத்தப்படுவதோடு கிரா மப்புற சமூக மேம்பாட்டுக்கான 85 பில்லியன் நிதியும் நிறுத்தப்பட்டுள்ளது . இதேவேளை பெரும் சுமையாகக் காணப்படும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உட்பட நாட்டின் பொதுத்துறை செலவினக் குறைப்புகளை மீளாய்வு செய்வதற்கு நிதி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது .(நி)

# டீசல் விநியோகத்தை மட்டுப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

மட்டுப்படுத்தப்பட்ட டீசல் கையிருப்பு காரணமாக முன்னுரிமை பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மட்டுமே டீசல் விநியோகிக்கப்படும் என பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்துள்ளார்.

மேலும் நாளாந்த விநியோகம் சுமார் 2,500 மெற்றிக் தொன்களாக குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்திய கடன் வசதியின் கீழ் அடுத்த கப்பல் டீசல் எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள் ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# கோட்டா கோ கமவில் மெழுகுவர்த்திப் போராட்டம்



(கொழும்பு)

கோட்டா கோ கம காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் 57 ஆவது நாளான நேற்று முன்தினம் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களால் மெழுகுவர்த்தி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி)

# பொதுமக்களின் எதிர்ப்புக்கு பயந்து பின்கதவால் சென்ற அமைச்சர்



(அம்பாந்தோட்டை)

கமநல சேவைகள், வன ஜீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக அலுவலகத்தின் பின்கதவால் வெளியே சென்றுள்ளார்.

துணைப் பயிர்ச்செய்கை தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சர் மகிந்த அமரவீரவும் கலந்து கொண் டார்.

பிரதேச செயலகத்தின் வெளியே ஒன்றுகூடி அமைச்சருக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். சிறுபோக பயிர்ச்செய்கைக்கு உரம் வழங்குமாறும், விவசாயிகளுக்குரிய பொருள் வழங்க விசேட நடவடிக்கை மேற்கொள்ளுமா றும் அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர். பொதுமக்களின் எதிர்ப்புக்கு பயந்து பின் கதவால்சென்ற அமைச்சர் விவசாயிகள் திரளாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்த காரணத்தி னால் தனது உத்தியோக பூர்வ வாகனத்தை கைவிட்டு பிரதேச செயலகத்தின் வாகனம் ஒன்றில் ஏறி பின்கதவால் வெளியே ... விட்டுச் சென்றுள்ளார். (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 350 |
| உருளைக்கிழங்கு | 230 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 450 | 800 |
| தக்காளி | 800 | 750 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 140 | 160 |
| கோவா | 350 | 300 | 280 | 350 |
| கரட் | 200 | 350 | 360 | 400 |
| பூசணி | 140 | 130 | 100 | 140 |
| புடோல் | 280 | 200 | 280 | 300 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 480 | 500 | 400 | 600 |
| பெரிய வெங்காயம் | 230 | 230 | 210 | 240 |
| பாகற்காய் | 700 | 700 | 700 | 600 |
| வெண்டக்காய் | 180 | 200 | 180 | 350 |
| கருணைக் கிழங்கு | 230 | 180 | 140 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 350 | 300 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 360 | -- | 400 |
| கறிமிளகாய் | 500 | 400 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 1000 | 1400 |
| போஞ்சி | 800 | 650 | -- | 600 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 | 120 |
| தேசிக்காய் | 800 | 50 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 650 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 180 | 200 | -- | 300 |
| பொன்னாங்கண்ணி | 70 | 70 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 80 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மன்னாதி மன்னன்



(நேற்றைய தொடர்ச்சி)

அமுதனும் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து ரமணனைக் கண்டான். அப்போது ரமணன் அமுதனிடம் மன்னரிடம் உனக்கு என்ன வேலை? என்று கேட்டான். அமுதனும் "மன்னரிடம் மக்கள் படும் துயரைக் கூறி வரிகளைக் குறைக்கும்படி கேட்கப் போகிறேன்" என்றான்.

அதற்கு ரமணன் "மன்னருக்கு நாட்டின் நிலை தெரியும். நீ ஒன்றும் எடுத்துக் கூற வேண்டாம். பொக்கிஷத்தில் பணம் இல்லை. அதனால் வரி வசூலித்துத் தானே ஆக வேண்டும்?" என்றான். அமுதனும் "பொக்கிஷம் காலி என்றால் அதை நிரப்ப மன்னன் வழி தேட வேண்டும். வரிகளை விதித்து நிரப்ப முடியாது. எனவே அதற்கான வழியை நான் மன்னரிடம் சொல்லப் போகிறேன்" என்றான்.

ரமணனும் "அந்த வழியை என்னிடம் சொல். நான் மன்னரிடம் தெரிவிக்கிறேன்" என்றான். ஆனால் அமுதனோ "அதை நான் மன்னரிடம் தான் கூறுவேன். வேறு யாரிடமும் சொல்ல மாட்டேன்" என்றான்.

ரமணனும் "அப்படியா! மன்னரைக் காண வேண்டும் என்று தெருவில் திரிபவர்களெல்லாம் வந்தால் நான் உள்ளே விட்டு விடுவேனா? அவர்களைத் தடுத்து நிறுத்தவே! நாங்கள் இருக்கிறோம். மன்னரைக் காண்பது எளிதல்ல அதற்குப் பல முறைகள் உள்ளன அவற்றைக் கடைப்பிடித்தாலே நீ மன்னரைக் காண முடியும். நீ எனக்கு நூறு வராகன்கள் கொடுத்தால் என் மேலதிகாரியைச் சந்திக்க அனுமதிக்கிறேன். அவருக்கு நீ இரு நூறு வராகன்கள் கொடுத்தால் அவர் உன்னைத் துணை மந்திரியிடம் அனுப்புவார். நீ துணை மந்திரிக்கு ஐந் நூறு வராகன்கள் கொடுத்தால் மந்திரியைக் காண முடியும். நீ மந்திரிக்கு ஆயிரம் வராகன்கள் கொடுத்தால் மன்னரைக் காணலாம். இது தான் எங்கள் மாமூல்" என்றான் சற்றும் கூச்சப்படாமல், மன்னனைக் காணத் தன்னால் முடியாது என்று கண்டு கொண்ட அமுதன் தலை நகரிலிருந்து காட்டை நோக்கிச் சென்றான்.


நடுக் காட்டில் அவன் ஒரு முனிவரைக்கண்டான். அவரும் "நல்லவேளை! யாராவது இங்கு வருவார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தேன். நீ வந்தாய். நான் இமய மலைக்குப் போகப் போகிறேன். என்னிடமுள்ள மகிமை வாய்ந்த கல் மோதிரத்தை உன்னிடம் ஒப்படைக்கிறேன்" எனக்கூறி ஒரு மோதிரத்தை அவனிடம் கொடுத்தார்.

அது வைர மோதிரம். அதன் முன் அநியாயக்காரன் எவனாவது வந்தால் மோதிரக்கல் நீல நிறமாக மாறும். மோதிரத்தை அணிந்தவன் பஞ்சாட்சர மந்திரம் ஜெபித்தால் அவன் விரும்புவது நடக்கும் இந்த சக்திகளை முனிவர் கூற அமுதன் அறிந்து கொண்டான்.

மோதிரத்தை அணிந்து கொண்டு அமுதன் முதலில் தன் ஊரான தாராபுரிக்குச் சென்றான். அங்குள்ள தன் நண்பர்களை அழைத்துக் கொண்டு தலை நகரில் அம்மோதிரத்தின் சக்தியால் ஒரு பணக்காரனின் வீட்டில் தங்கினான். (தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




அவள் நெஞ்ச அவலத்தை அஞ்சனை மகன் அறிந்து வருந்தினான்; அதைத் துடைக்க ஆறுதல் மொழிகளைக் கூறினான்.

'நீர் செப்புவது அனைத்தையும் ஒப்புக் கொள்ள முடியாது; மரணத்தைப் பற்றிச் சிந்திக்க இது தருணம் அன்று; திங்கள் ஒன்று நீங்கள் இங்கு தங்கி இருக்கத் தேவை இல்லை; ஊண் உறக்கமின்றித் தவிக்கும் புவிக்கு நாயகன், நீர் இருக்கும் இடம் அறியாக்குறையே தவி ரப் படை எடுக்கத் தடை ஏதும் இல்லை' என்று ஆறுதல் கூறினான்.

"நறுக்கென்று சொல்லத்தக்க நினைவுகளைச் சொன்னால் யான் உங்களைச் சந்தித்தமைக்குச் சிறந்த சான்றுகளாய் அமையும்" என்று கூறினான். "இந்திரன் மகன் சயந்தன், எங்கள் ஏகாந்தத்தின் இடை புகுந்து, காக்கை வடிவில் என் யாக்கையைத் தொட்டான்; புல் ஒன்று கொண்டு அப்புள்ளினை விரட்டினான் இராமன்; இந்தச் செய்தியைச் சொல்லுக" என்றாள். "காக்கை ஒன்று தொட்டதற்கே அவன்பொறுமை காட்டவில்லை அரக்கன் ஒருவன் சிறை வைத்திருப்பதை அவன் எப்படிப் பொறுத்திருக்க முடியும்?" என்ற கருத்தை உண்டாக்க இந்தச் செய்தியை நினைவு படுத்தினாள். "எல்லாம் விதியின் செயல்" என்று எண்ணிப் பெரு மூச்சு விடும் அவள், இத்துன்பங்களுக்கெல்லாம் காரணம் யார்? என்று எண்ணிப் பார்த்தாள்.

"மாமியார் செய்த கொடுமை" என்பதைச் சொல்லாமல் சொல்லி அனுப்புகிறாள். "அன்பாக வளர்த்து வந்த தன் கிளிக்கு யார் பெயர் இடுவது?" என்று இராமனைக் கேட்க, அவன், தான் நேசித்து வந்த மதிப்புமிக்க அன்னை கேகயன் மகள் பெயரை வைக்கும்படி கூறியதை நினைவுபடுத்தினாள்.

அர்த்தமுள்ள நிகழ்ச்சியாக இது இருந்ததால் அதனை எடுத்து உரைத்தாள். "எந்தத் தாயை அவன் உயிரினும் மேலாக நேசித்தானோ அவளே அவன் வாழ்வுக்கு உலை வைத்தாள்" என்பதை நாகரிகமாய்ச் சுட்டிக் காட்டினாள். கணையாழியைக் கொடுத்த இராமனுக்கு அதற்கு இணையாய்த் தன் தலையில் குடியிருந்த சூடாமணியை எடுத்து அவனிடம் தந்தாள்.

"இது எங்கள் மண நாளை நினைவுபடுத்தும் அடையாளம்" என்றாள். துகிலில் முடித்து வைத்திருந்த அந்நகையை அவனிடம் தந்து, விடை தந்து அனுப்பி வைத்தாள்.

### அனுமன் சீற்றம்

நெருப்போடு விளையாடிய இராவணனுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினான் 'மானிடர் இருவர், என்று மதித்து இடர் விளைவித்த இராவணன், அவர்தம் ஆற்றலை அறியவேண்டும், என்று விரும்பினான் அனுமன். 'சீதை இருந்த சோலை அது அவளுக்கு நிழலைத் தந்தாலும், அது சிறையாக இருப்பதை வெறுத்தான் (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்களாய் நாம் இருப்பதன் மூலம், வேறெந்த வழியில் நாம் செய்வதைக் காட்டிலும் நல்லன வற்றை அதிகம் செய்ய முடியும்!

~ ஸர் ரோலண்ட் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காணியற்றவர்களுக்கு அரச காணிகளை வழங்குங்கள்

நாட்டின் பொருளாதார நெருக்கடி உச்ச மடைந்திருக்கும் இவ்வேளையில் நெற் செய்கை, உணவுத் தானிய விதைப்பு, மரக்கறி பயிரிடல், வீட்டுத்தோட்டம் என்பவற்றை ஊக்கு விக்கின்ற தேவை அனைத்துத் தரப்பாலும் உணரப்பட்டுள்ளது.

பொதுவில் விவசாயம் ஊக்குவிக்கப்படாமல் விடப்படுமாயின், பஞ்சத்தின் கோரதாண்ட வத்தை எவராலும் தடுக்கவும் தவிர்க்கவும் முடியாமல் போகும்.

இந்த நிலையில்தான் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வனவளத் திணைக்களத் தால் கையகப்படுத்தப்பட்ட தனியாருக்குச் சொந்தமான வயல் நிலங்களை உடனடியாக உரியவர்களிடம் கையளிக்குமாறு விவசாயம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர அவசர உத்தரவைப் பிறப்பித் துள்ளார்.

இஃது ஒருபுறமிருக்க, பெருந்தோட்டப் பகுதியில் பயன்பாடற்றிருக்கக்கூடிய நிலங் களை விவசாயச் செய்கைக்கு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட் டுள்ளார்.

ஆக, எந்த நிலமும் வானம் பார்த்த பூமி யாக இருப்பதை அனுமதிக்க முடியாது என்ற முடிவுக்கு ஆட்சித் தரப்பு வந்து விட்டது.

இந்த இடத்தில் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் இருக்கக்கூடிய அரச காணி களில் பயிர் செய்யக்கூடிய நிலங்களை காணியற்றவர்களுக்கு வழங்குகின்ற ஒரு திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண் டும்.

இவ்வாறு காணியற்றவர்களுக்கு அரச காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒரு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மற்றும் பிரத மரிடம் விசேட அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் தற்போது ஏற்பட்டுள்ள சந் தர்ப்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி, காணி யற்றவர்களுக்கு அரச காணியை வழங்கு வதற்கு எங்கள் மாவட்ட செயலகங்களும் அந்தந்தப் பிரதேச செயலகங்களும் தயா ராகும்போது, எங்கள் வடக்கு கிழக்கு மாகா ணங்களில் காணியற்றவர்களுக்குக் காணி யும் எதுவித பயிர்ச்செய்கையும் இன்றி வானம் பார்த்த பூமியாகக் கிடந்த அரச காணிகள் விளைநிலமாக - நெற்செய் களனியாக மாற்றமடையும்.

எனவே சட்டதிட்டங்கள், சடங்குகள், இயல் பாக நம்மிடம் இருக்கக்கூடிய காலக்கடத் தல்கள், ஏழை மக்கள் மீது இரக்கம் காட்டாத வக்கிர மனநிலைகள் என்பவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு, பிரதேச செயலருக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, காணி யற்றவர்களுக்கு அரச காணி வழங்கும் போது, அதனால் மனிதங்கள் உயிர்வாழக் கூடிய பெரும் புண்ணியம் நடந்தாகும்.

ஆகையால் எந்தத் தாமதமும் இன்றி, கிடைத்த சந்தர்ப்பத்தை உங்கள் அதிகாரத் தின் மூலம் பயன்படுத்தி ஏழை மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றுங்கள். அவர்கள் உங்களைத் தெய்வமாகப் போற்றுவார்கள்.

## மூடிய காருக்குள் விளையாடிய 3 சிறுவர்கள் மூச்சுத் திணறிப் பலி

(சென்னை)

தமிழகம் - திருநெல் வேலியில் நீண்ட நாட் களாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த காருக்குள் விளையாடிய 7,5 மற் றும் 4 வயதான மூன்று சிறுவர்கள் மூச்சுத் திண றல் ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் பெரும் சோக த்தை ஏற்படுத்தியுள்ளது.

திருநெல்வேலி மாவ ட்டம் பணகுடி அருகே உள்ள ஒரு குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 7 வயதான நாகராஜன் நிதிஷ் 5 வயதான நிதிஷா மற்றும் இவர்களது வீட்டு க்கு அருகில் வசிக்கும் 4 வயதான மணிகண் டன் கபிஷன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

வீட்டின் எதிரே பல நாட்களாக நிறுத்தி வைக் கப்பட்டிருந்த காரில் ஏறி நேற்று முன்தினம் சனிக் கிழமை 3 சிறுவர்களும் விளையாடிக் கொண்டி ருந்தனர். அப்போது திடீ ரென காரின் கதவு பூட்டிக் கொண்டதால் திறக்க முடி யாமல் 3 சிறுவர்களும் மூச்சுத் திணறி உயிரி ழந்ததாக தெரியவந்து ள்ளது. (ம-7)

## மே 9 வன்முறைச் சம்பவம்; அம்பாறையில் இதுவரை 33 பேர் பொலிஸாரால் கைது

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில், அம்பாறை யில் இதுவரையில் 33 பேர் கைது செய்யப்பட்டு ள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப் பினர்களின் வீடுகளுக்கு தீ வைத்தமை மற்றும் சேதப்படுத்திய குற்றச் சாட்டின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த சந்தேகநபர் களை நீதிமன்றில் முன் னிலைப்படுத்த நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை 7 ஆம் திகதி காலை 8 மணியிலி ருந்து மாலை 5 மணி **யாழ். பிரதே சத்தில்** சுன்னாகம் சந்தை, கந்தையா உபாத்தியார் சந்தி, கொத்தியா வத்தை நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர்வழங் கல் திட்டம், புளியங் கூடல், சரவணைச் சந்தி, சுருவில் - ஊர் காவற்றுறை ஆகிய இடங்களிலும் **கிளி நொச்சி பிரதேசத் தில்** வன்னிவைரம், பொன்னகர் பூவரசங் குளம், விநாயகபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## தங்காலையில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி; இருவர் காயம்

(கொழும்பு)

தங்காலை - மொர கெடியர பகுதியில் துப்பாக் கிச்சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச் சாளர் அலுவலகம் இத னைத் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் நபர் ஒரு வர் உயிரிழந்துள்ளது டன், இருவர் காயமடை ந்துள்ளதாகவும் பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர். (ம-7)

## ரஷ்ய பயணிகள் அனைவரும் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

நீதிமன்ற தடை உத் தரவின் காரணமாக தடு த்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய எரோஃப்ளோட் விமானத்தில் நாட்டை வந்தடைந்த சகல பய ணிகளும் தற்சமயம் வெளியேறியுள்ளதாக சிவில் விமான சேவை கள் அதிகார சபை தெரி வித்துள்ளது.

குறித்த விமானத்தில் 191 பேர் நாட்டை வந்த டைந்த நிலையில், அவர் கள் வேறு விமானங்க ளின் ஊடாக ரஷ்யாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் உப தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரி வித்தார்.

குத்தகைப் பிரச்சினை காரணமாக ரஷ்யாவின் "எரோஃப்ளோட்" விமா னம் இலங்கையில் இரு ந்து வெளியேறுவதற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் இடை க்கால தடைவிதிக்கப்பட் டுள்ளது குறிப்பிடத்தக் கது. (ம-7)

## சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயங்களை வைத்திருந்த இந்திய பிரஜை கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயங் களை இலங்கைக்கு கொண்டு வந்த இந்திய பிரஜை ஒருவர் கட்டுநா யக்க விமான நிலையத் தில் வைத்து கைது செய் யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை அவர் கைது செய்யப்ப ட்டதாக தெரிவிக்கப்படு கிறது.

குறித்த நபரிடம் இரு ந்து 117,000 கனடா நாட்டு டொலர்கள் மீட்க ப்பட்டுள்ளன.

அத்துடன் 19,000 யூரோவும் சுங்கத் திணைக்களத்தினால் இதன்போது கைப்பற்றப்ப ட்டுள்ளது. (ம-7)

## அல்வாயில் சிறுமியின் சங்கிலி அறுத்தவர் கைது

அல்வாய் வடக்கு பகு தியில் 12 வயது சிறுமி யின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டு ள்ளதுடன் அவரிடமிரு ந்து தங்கச்சங்கிலி யையும் மீட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி அல்வாய் வடக்கு பகுதி யில் வர்த்தக நிலையத் திற்கு சென்ற சிறுமி ஒரு வரின் தங்கச்சங்கிலி அறுத்து செல்லப்பட்டிரு ந்தது.

இச்சம்பவம் தொடர் பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டது.

இந்நிலையில்,நேற்று மேற்படி சந்தேக நபரை கைது செய்தனர். அவரி டம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அறுக் கப்பட்ட சங்கிலி மீட்க ப்பட்டுள்ளது. (ம-7,60)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### சினம் ஒரு சங்கிலி



சினமானது பிறரை எவ்வாறு துன்புறுத்துகின்றதெனப் பார்ப்போம். சொந்த மகன், மகள், வாழ்க்கைத் துணை என்று வைத்துக் கொள்வோம். சினம் எழும்போது அவர்கள் மனம் என்ன பாடுபடுகின்றது என்பதை நாம் உணர வேண்டும். பிறர் நம்மீது சினம் கொள்ளும் போது நம் மனம் எவ்வாறு நோகிறது, வருந்துகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுபோன்றுதானே பிறர் மேல் நாம் கொள்ளும் சினம் அவர்களிற்கு வருத்தத்தை அளிக்கும் என்று கண்டுகொண்டால் நம்மோடு ஒத்த உறவினர் நமக்கு நலன் செய்பவர்களை இப்படி வருந்தவிடுவது நல்லதன்று என்று தெளிவாகும். எனவே அதைத் தவிர்க்கத்தான் வேண்டும். அது மாத்திரமன்று ஒருவர் மீது சினம் கொண்டால் அது ஒரு அவமதிப்பும் கூட. ஒருவர் மீது சினம் கொள்ளும் போது அவர்கள் படும் வருத்தம் ஒரு சாபமாகவே மாறுகிறது. இவ்வாறு பிறரைச் சினம் பாதிக்கும் போது பிறரை எவ்வாறு சினம் பாதிக்கிறது என்பது நன்றாக உங்களுக்கு தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

## கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 78

அட்டவணை Aயைப் பார்க்கும்போது குருநாகல், அனுராதபுரம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கட்டாயமாக ஒரு முஸ்லிம் தெரிவு செய்யப்படக் கூடியதாக தொகுதி பிரிக்கப்பட்டிருக்கவேண்டும் ஆனால் அவ்வாறு ஏன் பிரிக்கப்பட வில்லை. அதற்குக் காரணம் அவர்கள் அம் மாவட்டத்தில் பரந்து வாழ்ந்ததேயாகும். உதாரணமாக அனுராதபுர மாவட்டத்தை எடுத்தால் ஒரு தொகுதிக்கு வேண்டிய சனத்தொகை 78234 முஸ்லிம்களின் சனத்தொகை 70692. இதன்படி கட்டாயமாக ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் முஸ்லிம் சமுகம் அனுராதபுர பிரதேசச் செயலாளர் பிரிவுகள் யாவற்றிலும் பரந்து வாழ்கிறார்கள். இதனை அட்டவணை B காட்டுகிறது. இதனால் அவர்களை ஒன்றிணைத்து தொகுதி உருவாக்க முடியவில்லை.

சிறுபான்மைச் சமுகத்தின் பிரச்சனைக்கு தீர்வாக போனஸ் ஆசனங்களை சிறுபான்மைச் சமுகத்தினரிடையே எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென்றும், சிறந்த தீர்வாக போனஸ் ஆசனங்களை 5 ஆக அதிகரித்து அவை சிறுபான்மைச் சமுகத்தினரிடையே எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென்றும் இரு முறைகளை ஜீலை மாதத்தில் பாராளுமன்றத்தில் நடந்த கட்சிக் கூட்டத்தில் எல்லை நிர்ணயக் குழு சமர்ப்பித்திருந்தது. அது கருத்தில் கொள்ளப்படவில்லை.

இது சம்பந்தமாக எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு 02-07-2018 இல் விவரமான கடிதம் ஒன்று எழுதியிருந்தார் அது கீழே தரப்படுகிறது.

கௌரவ கருஜெயசூரிய
தவிசாளர்
அரசியலமைப்புப் பேரவை,
சபாநாயகர் அலுவலகம்,
பாராளுமன்றக் கட்டடத் தொகுதி,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டை.

கௌரவ தவிசாளர் அவர்களுக்கு

***மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்.***

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் தொகுதிகள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 6 ஆம் திகதி நடைபெற இருக்கும் கூட்டத்திற்கு எனக்கு அழைப்பு தரப்பட்டுள்ளது. அக் கூட்டத்திற்கு வருகைதரும் முன் பின்வரும் கருத்தை பரிந்துரைக்க விரும்புகிறேன்.

**1.கடைசியாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை**

கடைசியாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் இன ரீதியாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அட்டவணை-1 காட்டுகின்றது.

அட்டவணையை அவதானிக்கும் போது போனஸ் ஆசனங்கள் உட்பட அத் தேர்தல்களில் 348 சிங்கள உறுப்பினர்களும் 64 தமிழ் உறுப்பினர்களும்43 முஸ்லிம் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் மற்றும் முஸ்லிம் உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பார்க்கும் போது அவர்கள் தாங்கள் சேர்ந்து இருந்த கட்சியின் உதவியோடும் தங்கள் இனத்தின் ஆதரவோடும் வெற்றியடைந்திருப்பதை வெளிப்படுத்துகின்றது.

**2. எல்லை நிர்ணயக் குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் தொகுதிகள்**

மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, போனஸ் ஆசனங்களை தவிர்த்து மொத்தமாக இருக்கும் 437 உறுப்பினர்களில் 50% மான உறுப்பினர்களுக்காக 222 தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்தது.

இவ் 222 தேர்தல் தொகுதிகளில் 174 தொகுதிகளில் பெரும்பான்மையாக சிங்கள இனத்தவர்களும் 35 தொகுதிகளில் பெரும்பான்மையாக தமிழ் இனத்தவர்களும் 13 தொகுதிகளில் பெரும்பான்மையாக முஸ்லிம் இனத்தவர்களும் உள்ளனர் (அட்டவணை-2).

இத் தொகுதிகள் சட்டத்தில் உள்ள அடிப்படை வரம்புகளையும் இனங்களின் நலன்களையும் கருத்திற்கு கொண்டே உருவாக்கப்பட்டதாகும். இனங்களுக்கிடையே பகிரப்பட்டுள்ள இத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வது இயலுமானதொன்றல்ல.

இனங்களின் (தமிழர் மற்றும் முஸ்லிம்) நலன்களை கருத்திற்கு கொண்டு ஒன்றுடன் ஒன்றுதொடர்பில்லாத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேர்த்து தொகுதிகள் உருவாக்கினால் இவ் இனங்களை பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதிகளை அதிகரிக்க முடியும்.

இம்முறை அத்தொகுதியிலுள்ள மற்றைய இனங்களின் நலன்களை பாதிப்பதோடு அவை நிர்வாகத்தில் எதிர்மறையான விளைவுகளைக் கொடுப்பதோடு அதன் பின் விளைவுகள் மிகவும் ஆபத்தானவையாகவுமிருக்கும்.

அட்டவணை B

| பிரதேசச்செயலகம் | முஸ்லீம் | பிரதேசச்செயலகம் | முஸ்லீம் |
|---|---|---|---|
| பதவிய | 1 | நாச்சதுவ | 3339 |
| கெபித்திகொல்லாவை | 2086 | நொச்சியாகம | 1982 |
| மதவாச்சி | 2785 | ராஜாங்கணை | 1 |
| மஹவிலச்சி | 5 | தம்புத்தேகம | 5 |
| மத்திய நுவரகம் பலாத்த | 5294 | தலாவ | 629 |
| ரம்பாவ | 5664 | திரப்பணை | 1649 |
| கஹட்டகஸ்திகிலிய | 8169 | கெக்கிராவை | 10904 |
| ஹொரவ்பொத்தானை | 9802 | பலுகஸ்வெவ | 16 |
| கலென்பிந்துனுவெவ | 1382 | இப்பலோகம | 5360 |
| நுவரகம் பலாத்த கிழக்கு | 2953 | மிஹிந்தலை | 1613 |

அட்டவணை-1

கடந்த மாகாண சபைத் தேர்தல் உறுப்பினர்கள் எண்ணிக்கை

| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேல் | 95 | 1 | 8 | 104 |
| மத்திய | 39 | 14 | 5 | 58 |
| தென் | 55 | | | 55 |
| வட | 2 | 33 | 3 | 38 |
| கீழ் | 10 | 9 | 18 | 37 |
| வடமேல் | 48 | | 4 | 52 |
| வட மத்திய | 31 | | 2 | 33 |
| ஊவா | 29 | 5 | | 34 |
| சப்பிரகமுவ | 39 | 2 | 3 | 44 |
| மொத்தம் | 348 | 64 | 43 | 455 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6,850 ரூபா...

அத்துடன் 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 2,740 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இன்று முதல் எரிவாயு சிலிண்டர்களை குறித்த நிறுவனம் சந்தைக்கு விநியோகிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அரச ஊழியர்...

இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதி பதவி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னோடியான கலந்துரையாடல் மேற்கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்தி முன்னேறுவதே நாடு முன்னோக்கிச் செல்ல ஒரே வழி.

அனைவரையும் ஒன்றிணைத்து இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் பணியாற்றுவது மிகவும் அவசியம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக உயர் பதவியில் இருப்பவர்களை பதவி விலகுமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். பதவி விலகல் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது.

நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பேன்" என்றார். (ம-7)

## 21ஆவது திருத்தச்...

வழியில் கூடியிருந்தன.

இதன்போது, தற்போது அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தம் குறித்து கரிசனை செலுத்தவேண்டுமா?, அதில் எவ்விதமான வகிபாகத்தினைச் செய்வது என்பது தொடர்பில் ஆராய்ந்திருந்தன. (ம-7)

## பால்மாவின்...

என தேசிய மற்றும் வெளிநாட்டு பால்மா நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பெறுமதி கூட்டல் வரி அறவிடப்படுவதில்லை. எனினும் பால்மாவுக்கு இந்த வரி அறவிடப்படுமா அல்லது இல்லையா என்பதை அரசாங்கம் உறுதியாக தெரிவிக்கவில்லை.

பால்மாவுக்கு பெறுமதி கூட்டல் அறவிடப்படா விட்டாலும் விசேட சந்தை பொருள் வரி உட்பட சில வரிகள் கொண்டுவரப்பட்டுள்ளதால், மீண்டும் ஒரு முறை பால்மாவின் விலைகளை அதிகரிக்க நேரிடும். (ம-7)

## இன்றுமுதல்...

அமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக இவ்வாறு பாடசாலைகள் மீள திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதி முதலாம் தவணையின் முதலாம் கட்டத்தை நிறைவுறுத்தி பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இன்று முதல் ஆரம்பமாகும் புதிய கட்டத்திற்கான பாடத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை வழங்குமாறு சகல பாடசாலைகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## பொருளாதார...

நெருக்கடி தொடர்பில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் இருந்தே இதனைக் கட்டுப்படுத்துவதற்காக செயற்பட்டிருக்க வேண்டும் எனவும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்ரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். (ம-7)

## போத்தல்...

நேற்று முன்தினம் இரவு போத்தல் குத்திய நிலையில் குற்றுயிராய்க் கிடந்த ஒருவரை அவதானித்த கடை உரிமையாளர் ஒருவர் 1990 அவசர ஆம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பை எடுத்து குறித்த நபரை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்திருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த நபர் உயிரிழந்தார்.

இவரது உடலில் போத்தலினால் குற்றப்பட்டு அதிக அளவு இரத்தம் பெருக்கெடுத்து காணப்பட்டது.

இச் சம்பவம் அருகில் உள்ள சிசிவி கமராவில் பதிவாகியுள்ளது. குறித்த நபர் தடுமாறி கீழே விழுவது அதில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,315,316)

## யாழ். பல்கலை...

கொண்டுள்ளனர்.

இதனால் நேற்று இரவு பதற்ற நிலை நிலவியது.

மேலும், சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நாட்டின் நிலைமை...

அம்பலாங்கொடையில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியை பதவி விலகுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் பிரதமர் பதவியை ஏற்று நாட்டை ஆட்சிசெய்ய விரும்பவில்லை

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்த பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்து செய்தால் பிரதமர் பதவியை ஏற்கத் தயார்

புதிய நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும், நாட்டின் நிலைமை மோசமடைந்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பாக எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் பொது மக்கள் தொடர்ந்தும் அவதிப்படுவதாகவும் வரிசையில் நிற்கும் நிலைமை அதிகரித்துள்ளதாகவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சவர்...

தொடர்ந்து சவர்க்காரங்களின் விலைகளும் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளன. லக்ஸ் சவர்க்காரம் ஒன்றின் புதிய விலை 225 ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் உடைகளுக்கு பயன்படுத்தும் சன்லைட் சவர்க்காரம் ஒன்றின் விற்பனை விலை 170 ரூபாய் ஆகவும் 1 கிலோகிராம் சன்லைட் சவர்க்காரதூளின் சில்லறை விலை 530 ரூபாயாக்வும் அதிகரித்துள்ளது.

மேலும் தீப்பெட்டி ஒன்றின் விலை 50 ரூபாயாக அதிகரித்துள்ளது. (ம-7)

## ரஷ்ய விமான...

மற்றும் மொரு நிறுவனத்திற்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தப் பிரச்சினை ஏற்பட்டதாக அமைச்சர் கூறினார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நீதிமன்ற நடவடிக்கையில் அரசாங்கம் தலையிட முடியாது என தூதரகத்திற்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தற்போதைய நிலைமை குறித்து ரஷ்ய தூதரகம் தெளிவடைந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் இன்று நீதிமன்றத்தில் அறிக்கையிட்டு விமானத்தை விடுவிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக ரஷ்ய Aeroflot எயார்லைன்ஸ் நிறுவனம் தமக்கு அறிவித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதனால் ஏற்பட்ட அசௌகரியத்திற்காக குறித்த விமானத்தின் பணியாளர்கள் மற்றும் பயணிகளுக்கு அமைச்சர் தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண இராஜதந்திர மட்டத்தில் செயற்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1255
மீனம் 2 4 3 3 2 5

### கொவிசெத
திகதி 2022.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 3019
N 15 36 71 77

### மெகா பவர்
திகதி 05/06/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1125
O 22 38 53 72 73

### ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2022.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 086
மீனம் 04 11 27 44 மீனம்

### மஹஜன சம்பத
திகதி 2022/06/05 — சீட்டிழுப்பு இலக்கம் 4777
X 2 1 3 8 2 9

### தன நிதானய
திகதி - 2022.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் - 807
N 63 69 79 82

### அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1578 — வர்ணம்: பச்சை — சீட்டிழுப்பு திகதி: 2022.06.05
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,630,560/-
05 10 58 63 U

### சனிதா
ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2022.06.05 — சீட்டிழுப்பு இல: 3913 — வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,524,940/-
08 26 35 59 F

### சசிரி
சீட்டிழுப்பு வாரம் 179 — சீட்டிழுப்பு திகதி 2022.06.05 — ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 18 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,479,940/-

### ராசி
திகதி 2022-06-05 — வெற்றி வாரம் 3464 — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,584,797.40
வெற்றி இலக்கங்கள் 01 23 39 45 — ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,172,980/-

### லக்ன 12
சீட்டிழுப்பு வாரம் 928 — மஞ்சள் — 2022.06.05 ஞாயிற்றுக்கிழமை
E 08 05 40 45 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 240,382,519/-

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1752 — நிறம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2022.06.05 — தினம் ஞாயிற்றுக்கிழமை
S 28 33 36 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,708,640/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11729) 076 825 7716 (ஆகாஸ்)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் இரண்டு அல்லது மூன்று அறைகள் மற்றும் இணைந்த குளியலறையுடன் (with ATTACHED BATHROOM) வீடு வாடகைக்கு தேவை. (11726)

**076 162 9517**
**077 334 7766**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# தீபம்
## கல்வி நிலையம்

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 2024

ஆரம்பம்:
**06.06.2022 திங்கள்**
**மாலை 3.00 மணி**

### கலைப்பிரிவு

**தமிழ்** - R.வசீகரன்
**அரசியல்** - R.பாலகாந்தன்
**புவியியல்** - R.கார்த்தீபன்
**ஊடகம்** - M.Y.கோணேஸ்
**கிறிஸ்தவ நாகரிகம்** - M.விமல்
**பொருளியல்** - V.ஜெகதீஸ்
**வரலாறு** - K.கலைச்சந்திரன்
**ICT** - V.நிரோஜன்

### வர்த்தகப்பிரிவு

**கணக்கீடு** - K.பாலகஜன்
**வணிகக்கல்வி** - S.K.பாலசபேஷ்
**பொருளியல்** - V.ஜெகதீஸ்
**ICT** - V.நிரோஜன்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (11760)

தொடர்புகளுக்கு:
**077 224 7781**

## தென்னிந்திய யாத்திரை

**நாட்கள் - 16** **ஆரம்பம் - 01.07.2022**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா
5 மாநிலங்களுக்கூடான யாத்திரை. 10 பேர்.
உடன் விபரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்க
விபரங்களுக்கு:- கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
(C-4432) T.P:- 077 768 0102

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (11768)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டட் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

**தரகர் தேவையில்லை** (11769)

**பார்வையிடும் நேரம்**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை**

**077 814 7389,**
**077 241 7589 - ஜெயம்**

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.

தொ.பே:- 076 443 1576 (C-4433)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4410) **V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A,சர்ப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## UK STUDENT VISA

**IELTS தேவையில்லை**
(நிபந்தனைக்குட்பட்டது)



DEGREE முடித்தவர்களுக்கு
1 வருட MASTER DEGREE
மற்றும்
வேலைவாய்ப்புக்கள்
(C-4410)

**CIMS COLLEGE** 0777-068-777

## Win Repair

குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்துவிட்டதா? கவலையை விடுங்கள். வீட்டிற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கின்றோம். (11770)

**077 964 8942**

## கணக்கீடு

**பிரத்தியேக / குழு வகுப்புக்கள்**
**A/L 2022, A/L 2023, A/L 2024**
கொழும்புத்துறை/ கந்தர்மடம்
**077 216 8884**

A+++ சித்தி பெறுவதற்கான
புதிய அணுகுமுறையில் புதிய கற்பித்தல்....

நீண்ட கால அனுபவம் கொண்ட யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்
திரு.க.பா.பாலகஜன் (Tutorial staff)
B.com(Jaf),H.N.Dip. in ACC (ATI),Dip. in Edu(OUSL), M.Com(Hons), ACC.Spl (11487)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு**
**அருகாமையில் 24 பரப்பு காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் (11749)

**பார்வையிடும் நேரம்**
**காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை**

ஒரு பரப்பின் விலை - **மூன்று இலட்சம்**

**தொடர்பு:- 076 436 5814**


## இதய அஞ்சலி



எமது பல்கலைக்கழக நண்பனும்
கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தருமான
**கனகரத்தினம் கிரிதரன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இரத்தினேஸ்வரி கனகரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-4442)

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
**யாழ்.பல்கலைக்கழக 95/96 நண்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.